நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



கோயிலும் பள்ளியும் கட்டி வைத்தவர்
கொப்பனு பட்டி சிறக்க வந்தவர்
தூய நெஞ்சினர் தேங்காய் வணிகர்
சொக்க லிங்கனர் வாழ்கபல் லாண்டு.

ஜனவரி 1996

உ

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமுக இலக்கிய மாத இதழ்)

குரல் 14

ஒலி 12

யுவ

மார்கழி

ஜனவரி

1996

தீர்த்தம் என்பது சிவகங்கையே
ரத்தரும் தலம் எழில்புலி யூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே.
குமரகுருபரர் (சிதம்பரச் செய்யுட் கோவை)


ஆசிரியர் :
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர் :
நடராஜ் அண்ணாமலை

துணை ஆசிரியர் :
எல். சுந்தரம்

அலுவலகம் :
108-109, நேதாஜி ரோடு,
அறை எண் 12, மாடி
மதுரை-625001.

ஆண்டுச் சந்தா ரூ. 42-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00



தேவகோட்டை பழநிப் பாத யாத்திரைப் பயண விவரம்

நிகழும் யுவஹு தை மீ 12உ (26—1—96) வெள்ளிக் கிழமை முதல் மாசி மீ 3 உ (15-2-96) வியாழக்கிழமை முடிய 21 நாட்கள்.

யுவஹு தை மீ 12உ 26 - 1 - 96 (வெ) தேவகோட்டை நகரப் பள்ளிக் கூடத்தில் காவடி கட்டிவைத்துப் பூஜை.

13உ 27—1—96 (ச) காவடிகள் நகர்வலம் வந்து சிலம்பணி பிள்ளையார் கோவிலில் தங்குதல்.

14உ 28—1—96 (ஞா) காலை, காவடியும், பாத யாத்ரீகர்களும் புறப்படுதல். பகல் ஊத்தாங்கிணற்றில் (சங்கராபுரம்) காவடி நிவேத்தியம். இரவு குன்றக்குடி. காரைக்குடி கண்டனூர் மற்றும் செட்டிநாட்டில் உள்ள பல ஊர்க் காவடிகளும் பாத யாத்ரீகர்களும் வந்து சேர்வார்கள்.

15உ 29—1—96 (தி) காலை, குன்றக்குடியிலிருந்து ரத்தின வேல் துணையுடன் புறப்படுதல். பகல் கண்டவராயன்பட்டிகண்மாயில் காவடி நிவேத்தியம், இரவு மருதுப்பட்டித் தோப்பில் முதல் நாள் பூஜை.

16உ 30—1—96 (செ) காலை சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் கோவிலில் காவடி தங்குதல். பகல், மணப்புச்சேரியில் காவடி நிவேத்தியம். (பாதயாத்ரீகர்கள் வெள்ளாளபட்டி வழியாக வருதல்) இரவு சமுத்திராபட்டியில் இரண்டாம் நாள் பூஜை.

17உ 31—1—96 (பு) காலை, நத்தத்தில் வாணியர் பஜனை மடத்தில் பானக பூஜை. பகல் உப்பாற்றில் காவடி நிவேத்தியம். இரவு இடைச்சி மடத்தில் மூன்றும் நாள் பூஜை.

18உ 1—2 - 96 (வி) காலை, திண்டுக்கல் அபிராமி அம்மன் கோவிலில் காவடி தங்கல். பகல் ரெட்டியார் சத்திரத்தில் காவடி நிவேத்தியம். இரவு நகரத்தார் ஊருணி என்கிற **செம்மடைப் பட்டியில் ஊஞ்சல்** நான்காம் நாள் பூஜை.

19உ 2—2—96 (வெ) காலை, செம்மடைப்பட்டியில் பானக பூஜை. பகல் (ஒட்டன்சத்திரம் கடந்து) **குழந்தை வேலன்** சந்நதியில் காவடி நிவேத்தியம். இரவு **அடையாள வேலை** தரிசித்து கலிங்கப்பையா ஊருணியில் (சத்திரப்பட்டி சாலையில்) ஐந்தாம் நாள் பூஜை.

20 உ 3—2—96 (ச) காலை, ஆயக்குடி பெருமாள் கோவிலில் பானக பூஜை. நெற்குப்பை மேலைச்சிவபுரி காவடிகளும் பாத யாத்திரை அன்பர்களும் வந்து சேர்வார்கள். பகல் இடும்பன் குளத் தில் நீராடி, இடும்பன் மலைச்சரிவில் காவடி நிவேத்தியம், இரவு பழநி அன்னதான மடத்தில் முதல்நாள் பூஜை.

21உ 4—2—96 (ஞா) **தைப்பூசம்.** 'அன்னதான' மடத்தில் இரண்டாம் நாள் பூஜை.

22உ 5—2—96 (தி) அன்னதான மடத்தில் மூன்றும் நாள் பூஜை

23உ 6—2—96 (செ) அன்னதான மடத்தில் நான்காம் நாள். **மகம்** நாளான இன்று பகல் இரண்டு மணிக்குமேல் புறப்பட்டு மாலையில் **காவடி செலுத்துதல்**

24உ 7—2—96 (பு) அன்னதானமடத்தில் ஐந்தாம்நாள் பூஜை தனியார் அபிஷேகங்கள். "**பழம் நீ**" பாதயாத்திரைக் குழுவின் சார் பில் பட்டக்காரர் மடத்தில் மதிய உணவு.

25உ 8—2—96 (வி) அன்னதானமடத்தில் அடுப்படி பூஜை. சுவாமி புறப்பாடு. தனியார் அபிஷேகங்கள்.

26உ 9—2—96(வெ) மலையில் சந்தனக்குழம்பு அபிஷேகம். பாத யாத்ரீகர்கள் விடைபெற்று ஊர் திரும்புதல்.

27உ 10—2—96 (ச) இரவு ஆறு மணி அளவில் காவடி விடை பெற்று ஊர் திரும்புதல்.

28உ 11—2—96 (ஞா) காவடி வழிநடையாக ஊர் திரும்புதல். பகல் திண்டுக்கல் மலைக்கோட்டை ஐயப்பன் கோவிலில் பூஜை.

29உ 12—2—96(தி) காவடி வழிநடையாக ஊர் திரும்புதல். இரவு சமுத்திராபட்டியில் பானக பூஜை. நெற்குப்பை மேலைச்சிவபுரி காவடிகள் இங்கிருந்து பிரிந்து செல்வார்கள்.

மாசி மீ 1உ 13—2—96 (செ) காவடி வழிநடையாக ஊர் திரும்புதல். இரவு மருதுபட்டித் தோப்பில் பூஜை.

2உ 14—2—96 (பு) திருப்பத்தூர் வழியாக காலை ஏழு மணி யளவில் குன்றக்குடி வந்தடைதல். இரவு பூஜை.

3உ 15—2—96 (வி) குன்றக்குடியிலிருந்து புறப்பட்டு தேவ கோட்டை வந்து சேர்தல்.

நன்றி : 'பழம்நீ' பாதயாத்திரைக் குழு

வழி நெடுகிலும் பழம் நீ அறக்கட்டளையின் மூலம் மருத்துவ வசதி செய்யப்படுகிறது.

நெற்குப்பை, மேலைச்சிவபுரி – பழநிப் பாத யாத்திரைப் பயண விவரம்

யுவ ஆண்டு தை மீ 16உ (30-1-96) செவ்வாய்க் கிழமை முதல் மாசி மீ 1உ (13-2-96) செவ்வாய்க்கிழமை வரை 15 நாட்கள்

யுவ ஹூ தை மீ 16உ 30—1—96 (செவ்) இரவு நெற்குப்பை காவடி புறப்படுதல். மேலைச்சிவபுரி சுப்பையா கோவில் சக்தி வேலாயுத சுவாமி காவடிகளுடன் இரவு புறப்பட்டு சமுத்திராபட்டி சென்றடைதல்

17உ 31—1—96 (பு) சமுத்திராபட்டியில் சக்தி வேலாயுத சுவாமிக்கு அபிஷேகம். காவடிகள் பூஜை.

18உ 1—2—96 (வி) குசவபட்டியில் அபிஷேகம், பூஜை இரவு திண்டுக்கல் நகரத்தார் சங்கத்தில் தங்கல்.

19உ 2—2—96 (வெ) செம்மடைப்பட்டி அபிஷேகம். பூஜை. இரவு குழந்தை வேலன் சன்னதி.

20உ 3—2—96 (ச) பகல் சக்தி வேலாயுதசுவாமி அன்னதான மடம் சென்று முதல் நாள் பூஜை. காவடிகள் இடும்பன் குளம் அடிவாரம். இரவு அன்னதான மடம் சென்றடைதல்.

21உ 4—2—96 (ஞா) அன்னதான மடத்தில் இரண்டாம் நாள் பூஜை. தைப்பூசம்.

22உ 5—2—96 (தி) அன்னதான மடத்தில் மூன்ரும்நாள் பூஜை.

23உ 6—2—96 (செ) நான்காம் நாள் பூஜை. காவடிகள், பால்குடம் மலைக்குச் செல்லுதல்.

24உ 7—2—96 (பு) ஐந்தாம் நாள் பூஜை.

25உ 8—2—96 (வி) மலையில் சக்தி வேலாயுத சுவாமிக்கு அபிஷேகம்.

26உ 9—2—96 (வெ) அன்னதான மடம்.

27உ 10—2—96 (ச) சக்தி வேலாயுத சுவாமி காவடிகளுடன் ஊருக்குப் புறப்படுதல்.

28உ 11—2-96 (ஞா) திண்டுக்கல் நகரத்தார் சங்கத்தில் காவடிகள் தங்குதல். சக்தி வேலாயுத சுவாமிக்கு அபிஷேகம்.

29உ 12—2-96 (தி) சமுத்திராபட்டியில் சக்தி வேலாயுத சுவாமிக்கு அபிஷேகம். இரவு திருநீறுப் பிரசாதம் பெற்றுக் காவடிகள் புறப்படுதல்.

1உ 13—2—96 (செ) நெற்குப்பைக் காவடிகள் சிங்கம்புணரி வழியாக மாலை நெற்குப்பை சென்றடைதல். மேலைச்சிவபுரி சக்தி வேலாயுத சுவாமியும் காவடிகளும் பிரான்மலை வார்ப்பட்டு வழியாக மாலை மேலைச்சிவபுரிக்கு வந்து சுவாமிநாத விநாயகர் கோவிலில் அபிஷேக ஆராதனைகள் முடிந்து இரவு சுப்பையா கோவில்சென்று இருப்பிடம் சேருதல்.

தகவல் : சிங்கப்பூர் திரு. மு. அ. இராமநாதன், மேலைச்சிவபுரி

திருமணம்

பி. அழகாபுரி திரு. மா.வயித்தி லிங்கம் செட்டியாரின் புதல்வி கல்யாணிக்கும் பி. அழகாபுரி திரு. சொ. கரு சொ. திருநாவுக்கரசு செட்டியாரின் புதல்வன் சொக்கலிங்கம் B.Scக்கும் பி. அழகாபுரியில் 8—12-95 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

★ ★ ★

பனையப்பட்டி திரு. சி மு. மு. ராம. முத்துக்கணேசன் செட்டியார் பேரனும் டாக்டர் G.N. சுப்பையாவின் புதல்வனுமான முத்துக்கணேஷ் M. Sc.க்கும் சொக்கலிங்கம்புதூர் திரு. அணா காசி விஸ்வநாதன் செட்டியார் புதல்வி உண்ணுமலை B. A. க்கும் சொக்கலிங்கம் புதூரில் 5-11-95 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

★ ★ ★

சொக்கலிங்கம்புதூர் திரு.பழ சபாபதி செட்டியார் புதல்வன் பழநியப்பன் என்ற பசுபதி சதாசிவத்திற்கும் அரியக்குடி திரு. வெ. ராம. ராம இராமசாமி செட்டியார் புதல்வி சிவகாமிக்கும் 5-11-95 அன்று அரியக்குடி காரைக்குடியார் திருமண மண்டபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

★ ★ ★

இராங்கியம் திரு. ராம. மு. நா. அண்ணமலை செட்டியார் பேரனும் திரு. அ. திருப்பதி செட்டியாரின் புதல்வனுமான டாக்டர் கல்யாணசுந்தரம் M.B.B.S. (Manipal)க்கும் வி. லெட்சுமிபுரம் டாக்டர் ராம.அ. இராமசாமிச் செட்டியார் MBBS அவர்கள் புதல்வி மெய்யம்மை என்ற மெய்யா A C C A (U K) க்கும் வி. லெட்சுமிபுரத்தில் 5—11-95 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

★ ★ ★

''இடைக்கழி முருகன் வழித்துணை வருவான்''

காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகள் திருவிழாவில்'இடைக்கழிமுருகன்வழித்துணை வருவான்' என்னும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் திரு. ஆ. மங்கலமுடையான் ஓர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர். திருக்கோவில்களுக்குத் திருப்பணி செய்துவரும் நகரத்தார்களை அவர் பாராட்டினர்.

திருக்கடவூரிலிருந்து மேற்கே 7 கிலோ மீட்டர் தொலைவிலும் மயிலாடுதுறையிலிருந்து 26கி.மீ· தொலைவிலும் உள்ள திருஇடைக்கழி என்னும் திருக்குராவடியில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் மக்களின் கண்கண்டதெய்வமாக விளங்குவதாக அவர் கூறினர்.

தமது சொற்பொழிவில்அவர் மேலும் கூறியதாவது :-

திரு இடைக்கழி என்னும் இத்திருத்தலம்'திருக்குராவடி' என்று தெய்வத்தமிழ் நூல்களில் குறிப்பிடப்படுகின்றது. திருச்செந்தூரில் சூரனை முருகப்பெருமான் சமாரம் செய்தார். அதுபோன்று திருஇடைக்கழியில் சூரனின் இரடாவது மகனன இரணியாசூரனை முருகப்பெருமான் சமாரம் செய்தார். அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களிலும் திருக்குராவடி குறிப்பிடப்படுகிறது. திரு இடைக்கழியிலுள்ள சகலமூர்த்திகளும் தங்கள் கரங்களில் வச்சிரவேல் ஏந்தி சுப்பிரமணியராகவே காட்சி தருகின்றனர். கருவறையில் முருகனின் நான்கு புறங்களிலும் சிவபெருமான் சூழ்ந்து இருக்க சிவக்குமாரராக முருகன் காட்சி தருகிறுர். குமாரசிவமாகவே அவர் அருள்பாலிக்கிறுர். தெய்வயானை முருகனை நோக்கித் திரும்பிய திருமுகத்தோடு அமைந்து இருக்கிறுர். சேந்தனர்இது பற்றி தமதுபாடல்களில் பாடியுள்ளார். இடைக்கழியிலுள்ள தலவிருட்சம் திருக்குராமரம் ஆகும். ''திருக்குராவடி நிழல் தனில் உலவிய பெருமானே''என்பது திருப்புகழ். இங்குள்ள முருகனை வணங்குவோர். எல்லா நலங்களையும் பெறுகிறுர்கள். ஆண்டுதோறும் சிதம்பரத்திலிருந்து திருக்குராவடிக்கு முருகபக்தர்கள் பாதயாத்திரை செல்கிறுர்கள். சிதம்பரத்திற்கும் இத்தலத்திற்கும் இடையில் உள்ள தூரம் 50 கிலோ மீட்டர். மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் திருஇடைக்கழி முருகன் பற்றிபிள்ளைத்தமிழ்பாடியுள்ளார்

அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னுள் துணைவேந்தர் திரு இராம. சேதுநாராயணனின் முயற்சியால் இக்கோவிலுக்குரிய சாலை நல்ல முறையில் அமைக்கப்பட்டு உள்ளது.

வார வழிபாடு வெள்ளி விழா

காரைக்குடி முத்துப்பட்டணம் மூன்றும் வீதி முனையில் உள்ள செல்வ விநாயகர் கோவிலின் குடநீராட்டு விழா 1975-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது அன்று முதல் காசிஸ்ரீ திரு. அரு. சோம சுந்தரன் அக்கோவிலில் வெள்ளி தோறும் மாலை வார வழிபாடு நடத்துகிறார், அவர் காசிக்குப் பாதயாத்திரை புறப்படஉத்தரவு கொடுத்தவர் அந்த விநாயகரே. அக்கோவிலில் 15-12-95வெள்ளி இரவு வார வழிபாட்டு வெள்ளி விழா நடைபெற்றது. காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன் வழிபாடு நடத்திப் பக்தியின் மேன்மை பற்றி உரை ஆற்றினர். இக் கோவிலில் அரு. சோவும் அவரது புதல்விகளும், பேரன்களும் தொடர்ந்து 25 ஆண்டுகளாக வார வழிபாடு நடத்தி வருகின்றனர்.

குன்றக்குடியில் அன்னதானம்

குன்றக்குடியிலுள்ள கண்டவராயன்பட்டி பழ. கரு. மடத்தில் 5-12-95அன்றுதிருக்கார்த்திகையை ஒட்டி பழ. கரு. குடும்பத்தின் சார்பில் சமபந்தி போஜனமும், அன்னதானமும் நடைபெற்றன



12-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

(20–1–1996)

M. கண்ணன் B. Com.

தோற்றம் 13—10—1964
மறைவு 20—1—1984

தலைமகனாய்ப் பிறந்துநீயும் தெய்வம் ஆன
நிலைபெற்று ஆண்டுகளும் பனிரெண் டாச்சு
அப்பாவும் அம்மாவும் அறுப தாண்டு
நிறைவுற்று மணிவிழாக் காணும் இந்நாள்
தம்பிக்கு திருமணமும் விரைவில் ஏற்க
விண்ணின்று வாழ்த்திடுக விரைவில் வந்து
தம்பிக்கு தலைமகனாய்ப்பிறந்து எங்கள்
துயர்நீக்கி மகிழ்விக்க வேண்டுகின்றோம்

KR. மெய்யப்பன் **KM. சித்ரா (ஆச்சி)**
M. கமலம் **M. சிதம்பரம், B.Com., M.C.A.**
விரையாச்சிலை **M. முத்து (B.E.) தம்பியர்**

பழ. லெ. சொக்கலிங்கம் செட்டியார்

அன்பிற்குரிய எனது அம்மான் பழ. லெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் கொப்பனாபட்டியில் பிறந்தவர்கள். இரணிக் கோவிலைச் சேர்ந்தவர்கள்.

இவர்களது குடும்பத்தார் கொப்பனாபட்டியில் 20 ஆண்டுக் காலம் மரக்கடை ஒன்றை நடத்திவந்தார்கள். எனவே இவர்களது குடும்பத்திற்கு 'மரக்கடையார் வீடு' என்ற அடையாளப் பெயர் இன்றும் உண்டு.

அண்ணன் குடும்பத்திற்குத் தம்பியின் பிள்ளையும், தம்பி குடும்பத்திற்கு அண்ணனின் பிள்ளையும் சுவீகாரம் போவதை நம் சமூகம் கண்டிருக்கிறது. ஆனால் இவர்கள் தன் உடன் பிறந்த அண்ணன் லெட்சுமணன் செட்டியார் அவர்களுக்கே சுவீகாரம் சென்றவர்கள்.

அம்மான் சொ. அவர்கள் எந்த நேரமும் சிரித்த முகத்துடனேயே இருப்பார்கள். தமது 73 வயதிலும் சோர்வு என்றால் என்ன என்பதை அறியாதவர்கள். உதவி கேட்டு வருபவர்களுக்கு தன்னால் முடிந்த உதவிகளைச் சிரித்த முகத்துடன் செய்து கொடுப்பார்கள்.

திருமணம் மற்றும் பிரச்னைகளுக்குப் பஞ்சாயத்துச் செய்து வைக்க ஆட்கள் கிடைப்பது அரிதாக உள்ள இந்த நேரத்தில் சொ. அவர்கள் தன்காரில் வந்து எத்தனை நாட்களானாலும் இருந்து அதை முடித்துக்கொடுப்பார்கள். பஞ்சாயத்துச் செய்து வைக்க யார் அழைக்கிறார்களோ அவர்களுக்குச் சார்பாகச் செய்யாமல் எது நியாயமோ அதன் படி செய்து வைப்பார்கள்.

என்னைப் பொறுத்தவரை கொப்பனாபட்டிப் பகுதியில் ஏதாவது நடைபெற வேண்டுமென்றால் 30 ஆண்டுகளுக்கு முன்பு கொப்பனாபட்டி மு. ப. மு. நாராயணன் செட்டியார் அவர்களைத்தான் பார்ப்பேன். இப்போ



தெல்லாம் எனக்கு ஏதாவது தேவை, உதவி என்றால் அம்மான் பழ.லெ.சொ. அவர்களைத் தான் பார்ப்பேன். எனக்குப் பலநேரங்களில் பல உதவிகளைச் செய்து தந்ததோடு எனக்காக அவர்களே பலபொறுப்புக்களை ஏற்றுச் செயல்பட்டிருக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் 'கை பழகுவது' என்று சொல்வார்கள். இதற்காக பலர் வெளி நாடு

களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். எப்படிப் பேசுவது எப்படிப் பழகுவது, எப்படி வியாபார நுணுக்கங்களைச் செய்வது எப்படி பஞ்சாயத்துச் செய்வது என்று அம்மான் சொ. அவர்களிடம் நான் பாடம் கற்றுக் கொண்டு வருகிறேன். அவர்களும் கல்லூரிக் கல்வி போல எனக்கு அவற்றைப் போதித்து வருகிறார்கள். பிறருக்குப் போதிப்பதற்கு தகுதிகள் வேண்டும். அந்தத் தகுதிகள் அனைத்தையும் பெற்றவர்கள் சொ அவர்கள்.

பெண்ணுரிமையைப் பற்றி இப்போது மேடைகளில் பேசுகிறார்கள். சொ. அவர்கள் தன் மனைவியிடம் அன்பாக, கனிவாகப் பேசி, அவர்களுக்கு முழு உரிமையும் வழங்கி குடும்பம் சிறப்பாக நடந்துவர வழிகாட்டித் துணை புரிகிறார்கள்.

அம்மான் சொ. அவர்கள் தன் புதல்வர்களின் பெயர்களைச் சொல்லி அவர்களை அழைப்பதில்லை. மாறாக 'அப்பச்சி' என்று அழைத்து, 'இன்ன காரியத்தைச் செய்' என்று அன்பாக, கனிவாகச் சொல்வார்கள். குறிப்பாக அவர்களது புதல்வர் திரு. லெட்சுமணன் 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்று அவர்கள் சொல்வதை ஏற்றுப் பொறுப்பாகச் செயல்படுகின்ற காட்சிகளைப் பலமுறை கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

கொப்பனாபட்டியிலும் சரி மற்ற ஊர்களிலும் சரி அம்மான் சொ. அவர்களின் சொல்லுக்கு என்றும் மரியாதை உண்டு. அன்பு, பண்பு, பாசத்திற்குக் குறைவில்லாத அவர்கள் விளம்பரமில்லாமல் பலருக்கும் உதவி வருகிறார்கள். நகரத்தார்கள் மட்டுமல்லாமல் நாட்டார்களும் இவர்களது சொல்லை மதிக்கிறார்கள்.

நமக்குக்கணக்கில் சந்தேகம் வந்துவிட்டால் ஆடிட்டரிடம் போவோம். ஆனால் ஆடிட்டர்களுக்கு கணக்கில் ஏதாவது சந்தேகம் வருமானால் அவர்கள் சொ. அவர்களிடத்திலே கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். அந்த அளவிற்கு அம்மான் சொ. அவர்கள் கணக்கிலே நிபுணர்.

சொ. அவர்கள் எந்த வேலையைச் செய்தாலும் அதில் ஒரு தனித்துவம் (perfection) இருக்கும்.

கொப்பனாபட்டி ஸ்ரீ முத்து விநாயகர் கோவிலில் ஆண்டு தோறும் ஆருத்ரா தரிசன விழாவை நடத்திவரும் இவர்கள் அதற்காகவென்று நடராஜர் விக்கிரகம் ஒன்றை தமது நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். 1985 ல் நடைபெற்ற மேற்படி கோவிலின் குடநீராட்டு விழாவின் சிறப்புக்கு இவர்களின் சேவை பெரிதும் காரணமாகும்.

திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் கோவில் விநாயகருக்கு இவர்கள் வெள்ளி அங்கி செய்து



படத்தில் (இ-வ) திருவாளர்கள் லெ. சொ. இராமசாமி, லெ. சொ. பழநியப்பன், பழ. லெ. சொக்கலிங்கம் செட்டியார் லெ. சொ. லெட்சும்மணன், லெ. சொ. முத்துக்கருப்பன் உள்ளனர்.

நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள்.

கொப்பனாபட்டி நகரத்தார் களின் பொதுவாக மேற்படி ஊரார் வணங்கும் செங்கடாக் கருப்பர் பெயரால் இவர்கள் ஒரு திருமண மண்டபத்தை முன்னின்று கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

இவர்கள் தமது தாயாரின் நினைவாக கொப்பனாபட்டியில் பழ.லெ. மெய்யம்மை ஆச்சி உயர் தொடக்கப்பள்ளி' என்ற பெயரில் ஒரு பள்ளிக் கட்டிடத்தைக் கட்டி அதை அரசு வசம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

இவர்கள் மதுரை, திருச்சி, சின்னமனூர், அதிராமபட்டணம் கீவழூர் போன்ற ஊர்களில் பல தரப்பட்ட தொழில்களைச் செய்து வருகிறார்கள்.

அம்மான் சொ. அவர்களுக்கு அழகம்மை ஆச்சி என்கிற மனைவியும் திருவாளர்கள் லெட்சுமணன் பழனியப்பன், முத்துக்கருப்பன், இராமசாமி என நான்கு புதல்வர்களும் திருமதி மெய்யம்மை நாராயணன், திருமதி நாச்சம்மை அண்ணாமலை என இரு புதல்விகளும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

இந்த நாட்டில் செலவில்லாமல் செய்வது சிரிப்பு ஒன்று தான். அரசு வரி விதிக்காதது அது ஒன்று தான். அதைக்கூட பலர் செய்ய மறுக்கிறார்கள். சொ. அவர்கள் சிரித்தாலே நம் கவலைகள் எல்லாம் மறந்து போய்விடும்.

அம்மான் சொ. அவர்கள் கொப்பனாபட்டியில் பிறந்தது கொப்பனாபட்டிக்கு மட்டும் பெருமையல்ல; நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்திற்கே பெருமையாகும்.

— வி. என். சிதம்பரம்

ஆசிரியர்

வயிரவன் கோவிலில் பிள்ளையார் நோன்பு

வயிரவன்கோவிலில்27-12-95 புதனன்று இரவு பிள்ளையார் நோன்பு விழாச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

திரு. நாக.ராம.இராமசாமிச் செட்டியார், திரு. வாலாப்பூர் கருப்பன் செட்டியார். திரு. கே. எம். எஸ். அழகப்பன் ஆகியோர் சுமார் 1000 நகரத்தார் ஆண், பெண்களுக்கு இழை எடுத்துக் கொடுத்தனர். அனைவருக்கும் இரவு பலகாரம்வழங்கப்பெற்றது

பின்னர் 40 மங்கலப்பொருட் கள் ஏலம் விடப்பட்டன. காரைக் குடிதிரு.பழ.தெ.லெ.அருணசலம் செட்டியார் ஏலம் கூவ, பொன். புதுப்பட்டி திரு. நாக. ராம. இராமசாமிச் செட்டியார் ஏலம் எடுத்தவர்களுக்கு ஏலப் பொருட் களை வழங்கினுர்கள்.

பிள்ளையார் நோன்பை ஒட்டி வயிரவர் சுவாமிக்கு சொர்ண அங்கி அணிவிக்கப் பெற்றது.

'விசா' பெறுவதில் வெற்றி பெற.....

(தி. இராமனாதன்-திருச்சி)

நம் சமூக மாணவர்களில் பட்ட மேற்கல்வி கற்கவும் வேலை தேடியும் அமெரிக்க நாட்டிற்குச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் அதற்கான முயற்சியில் ஈடுபட்டும் சரியான வழிகாட்டி இல்லாமல்—விசா பெற முடியாமல் தவிக்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. எனவே அத்தகையோருக்கு உதவும் பொருட்டு ''விசா பெறுவதில் வெற்றி பெற'' என்ற இச் சிறு தொடர் கட்டுரையில் நல்ல பல யோசனைகளை வழங்க நான் முன் வந்துள்ளேன்.

இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்படும் அனுபவக்கருத்துக்கள் உங்களுக்கு விசா பெறுவதில் உங்களுடைய வாய்ப்பை அதிகரிக்கக் கூடுமேதவிரவாய்ப்புக்கு உறுதியளிக்க முடியாது.

பொதுவாக, அமெரிக்க நாட்டில் குடியேற வேண்டுமானால் நீங்கள் அமெரிக்கப் பொருளாதார உயர்விற்குப் பயன்படக்கூடியவரா என்பது அடிப்படையாகக் கவனிக்கப்படுகிறது. 'வீட்டுக்கு பாரம், நாட்டிற்குச் சுமை' என்பதற்கிணங்க நாட்டிற்குச் சுமையாகக் கருதப்படும் யாரையும் அமெரிக்கா குடியேறஅனுமதிப்பதில்லை

அமெரிக்கக் குடியுரிமைபெற இலஞ்சம், குறுக்குவழி, ஏஜெண்டுகள் என்று எதுவும் எக்காலத்திலும் பயன்படாது. எனவே ஆலோசகர் எனக் கூறித் திரியும் யாரையும் நம்பி பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம்.

அமெரிக்கா, உலகின் பல்வேறு இடங்களிலிருந்தும் மக்கள்

குடியேறி வாழ்கின்ற நாடு, அங்கு இன்னும் மக்கள் குடியேற வாய்ப்பு மிகவும் அதிகமாக உள்ளது. எனவே நீங்களும் அங்கு குடியேறலாம்! உங்களுக்கும் வாய்ப்பு உண்டு!

முதலில் விசாவின் Terminology பற்றி விவரிக்கிறேன். அதன்பின் இரண்டு பாகமாக குடியுரிமை கோரும் விசா Immigrant visa) குடியுரிமை கோரா விசா (Non-Immigrant visa) என்பவை பற்றி விவரிக்கிறேன்.

சொல்லகராதி

'விசா' பெற முயற்சிப்போர் ஒவ்வொருவரும் நடைமுறையில் தெரிந்துகொள்ள வேண்டிய சில சிறப்புச் சொற்களும் அதற்கான சரியான பொருள்களும் கீழே தரப்பட்டுள்ளன.

Accompanying Relatives :

உறவினர்கள் அதாவது கணவன்-மனைவி-21வயதிற்குட்பட்டதிருமணமாகாத பிள்ளைகள் விசா கோருபவருடன் உடன் செல்லவிழைபவர்கள்.

Alien Registration Receipt Card :

இதற்கு மற்றொரு பெயர் 'Green Card' என்பதாகும். இது விசா இல்லாமல் அமெரிக்காவிற்குள் நுழைய உதவும் சான்றிதழ். இதைப் பெற்றவர்கள் வெளிநாடுகளிலிருந்து அமெரிக்காவிற்குள் நுழைய 'விசா' போன்ற அனுமதி ஏதும் பெறத் தேவையில்லை. இதைப் பெற்றவர்கள் அமெரிக்காவில் வசிக்கும் உரிமையும் வேலை செய்யும் உரிமையும்பெற்றவராகிறார்கள். குறிப்பிட்ட காலத்திற்கு Green Card வைத்திருந்தால் பிரஜா உரிமைக்கு (Citizenship) தகுதி பெற்றவராகலாம்.

(தொடரும்)

மணி விழா

ஆற்காடு நூற்பாலையின் நிர்வாக இயக்குநரும் மதுரை வடக்கு நகரத்தார் சங்கத்தின் துணைத்தலைவரும் "நகரத்தார் குரல்" இதழின் வெளியீட்டாளருமான திரு. நடராஜ் அண்ணாமலை - திருமதிசொர்ணம் ஆச்சியின் 60ஆம்ஆண்டு நிறைவு மணிவிழா பனையப்பட்டியில் 30—1—96 செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

வயிரவன் கோவிலில் குட நீராட்டு விழா

நகரக்கோவில்கள் ஒன்பதில் ஒன்ருன அருள்தரும் வடிவுடையம்மை உடனுய அருள்தரும் வளரொளிநாதர், வயிரவசுவாமி திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டுவிழா 9—2—1996 (யுவ ஆண்டு தை மாதம் 26ஆம் நாள்) வெள்ளிக்கிழமைகாலே 8-55மணி முதல் 10-00 மணிக்குள் நடைபெற உள்ளது.

6—2—96 செவ்வாய் மாலே, முதல்கால யாகசாலேப் பூஜை தொடங்கி 9—2—96 காலே வரை ஆறு காலம் நடைபெற உள்ளது. யாகசாலே வழிபாட்டில் வேத பாராயணம் திருமுறை ஓதுதல் ஆகியவை நிகழும்.

குடநீராட்டு விழாவை ஒட்டி கலே, இலக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

7—2—96 புதன்

மாலே 5 மணி-மங்கள இசை. மாலே 6-30 மணி— அருள் நிறை அரங்கம். கோவிலூர், குன்றக்குடி, பாதரக்குடி, துலாவூர், காளேயார் கோவில் ஆதீனகர்த்தர்கள் பங்கு பெறுகிருர்கள். இரவு 8 மணி தேவாரம்.

8—2—96 வியாழன்

காலே 10 மணி - தேவாரம். இரவு 7மணி-வயிரவர் அரங்கம். இன்தமிழ் காட்டும் இனிய வணிகர்' என்றபொதுத்தலேப்பில் நடைபெற உள்ளது. கவிஞர்கள் புலவர்கள் பங்கு பெறுகிருர்கள், இரவு 9 மணி — 'நாடகக் காவலர்' திரு. ஆர். எஸ். மனோகர் குழுவினரின் ''திருநாவுக்கரசர்'' என்கிற சரித்திர நாடகம்.

9—2—96 வெள்ளி

காலே10-15மணி சொல்லின் செல்வர் திரு. சுகி சிவம் இலக்கியப் பேருரை ஆற்றுகிருர். மாலே 5-30 மணி-பட்டி மண்டபம். 'வாழ்வு மேம்பட பெரிதும் துணே நிற்பது அருளா பொருளா?' என்ற தலேப்பில் இரு அணியினர் வாதிடுகின்றனர். இதன் நடுவர் திரு. நெல்லே கண்ணன்.

குடநீராட்டு முடிந்தபின்மாலே 3மணிக்கு மகாபிஷேகமும் இரவு 7 மணிக்குத் திருக்கல்யாணமும் 10 மணிக்கு பஞ்சமூர்த்திகள் வயிரவ சுவாமி திருவீதி உலாவும் நடைபெற உள்ளன.

வயிரவன்கோவில்குடநீராட்டு விழாக்கள்ஏற்கனவே 1894, 1919, 1928, 1959, 1982 ஆண்டுகளில் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன.

குடநீராட்டு விழாவுக்கான ஏற்பாடுகளே திரு. எஸ். ஆர். எம். பி எல். சுப்பிரமணியன் செட்டியாரைத் தலேவராகக் கொண்ட வயிரவன் கோவில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்க நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

இக்குட நீராட்டு விழாவில் அனேத்து ஊர் நகரத்தார்களும் பங்குபெறும் வகையில் பொறுப்புக்கள் பிரித்துக் கொடுக்கப் பெற்றுள்ளன.

தெய்வகீதமா? தேசிய கீதமா?

இந்து ஒருவர் இறக்கும் தருவாயில், அவருக்கு நினைவுஇருக்குமானால் அருகில் இருப்போரிடம்“நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க” எனும் மணிவாசகரின் சிவபுராணப் பாடலைப் பாடச் சொல்வார். அந்தத் தெய்வகீதமே அவரின் மோட்சவாசலின் கதவைத்திறக்கும் என்பது அவரின் நம்பிக்கை. ஆத்ம திருப்திக்கும் அதுவே வழியாகும்.

ஆனால் கப்பலோட்டிய தமிழன் வ. உ சிதம்பரனார், தான் இறக்கும்தருவாயில்பாரதியாரின்

“என்று தணியும் எங்கள்
சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள்
அடிமையின் மோகம்”

எனும் பாடலைப் பாடச் சொன்னார். அவரின் இறுதி மூச்சிலும் கூட தேசிய கீதம்தான் அவர்க்குத் தெய்வகீதமாக இருந்திருக்கிறது.

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

(கமுதியில் 2—12—95ல் நடைபெற்ற வ. உ. சி. பிறந்த நாள் விழாக் கருத்தரங்கில்)

சேலத்தில் குடநீராட்டு விழா

சேலம் விசு பைப்ஸ் & பிட்டிங்ஸ் பி.லிட்நிறுவன வளாகத்தில் உள்ள ஸ்ரீ வலம்புரி விநாயகர் ஆலயத்தின் குட நீராட்டு விழா 10—12 95 அன்று காலை 8-45 க்கு சிறப்பாக நடைபெற்றது.

குட நீராட்டு விழாவுக்கு ஆடிட்டர் திரு. சித அண்ணுமலை செட்டியார் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் திருவாளர்கள் வி. பழநியப்பன், வி இராமநாதன் ஏஆர். சுப்பையா, ஏஆர். அண்ணுமலை, ஏஆர். சண்முகம், பிஎல். இராமசாமி சிதம்பரம், வைரம் சுந்தரதாசன் மற்றும்நண்பர்கள்,வாடிக்கையாளர்கள் வங்கி அதிகாரிகள் சேலம் பைப்ஸ், சேலம பைப்ஸ் பி.லிட், விசு பைப்ஸ் & பிட்டிங்ஸ் பி.லிட் ஊழியர்களும் அவர்தம் குடும்பத்தினரும் திரளாகக் கலந்துகொண்டனர்.

காலமானர்

எங்கள் பாசத்திற்குரிய வலையபட்டி
மெட்லா **முத்துராமன் செட்டியார்** அவர்கள்
21-10-95அன்று சிவபதவி அடைந்துவிட்டார்கள் என்பதை ஆழ்ந்தவருத்தத்துடன்தெரிவித்துக்கொள்கிறேம்.

மு. பத்மலோசனி ஆச்சி — மனைவி

மகன்கள் **M பழநியப்பன்**, B A — **M. கண்ணன்**
M முத்துராமன் — **M கணேசன்**

காந்திமதி — மகள் மற்றும் பேரன் பேத்திகள்

91/1

அறப்பணிக் கழகத்தின் கல்வி, திருமண நன்கொடை!

மலேஷியா மூவாரில் உள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கோவிலுக்குச் சொந்தமான மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக் கழகம் கடந்த 20 ஆண்டுகளாக புதுக்கோட்டையில் இயங்கி கல்வி, திருமணம் ஆகியவற்றிற்கு நன்கொடை அளித்து வருகிறது.

இந்த அறப்பணிக் கழகத்திற்கு மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கோவிலிலிருந்து அண்மையில் ஒருகோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி வந்துள்ளது என்றும் எனவே இந்த நிதியிலிருந்து கல்வி, திருமணம் ஆகியவற்றிற்கு விரிவான அளவில் நன்கொடை வழங்க இருப்பதாகவும் அதன் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் தெரிவித்திருக்கிறார்கள்.

அவர்கள் மேலும் கூறியதாவது :-

சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி கார்த்திகை தை, பங்குனி ஆகிய எட்டுமாதங்களில் நடைபெறும் திருமணங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 திருமணங்களுக்கு ரூ. 5000/- வீதம் நன்கொடை வழங்க இருக்கிறோம்.

10 திருமணங்களுக்கு மேல் விண்ணப்பம் வந்தால் மூவார் அறப்பணிக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் திருவுளச்சீட்டு போட்டு தேர்வு செய்து நன்கொடை வழங்குவோம்.

சித்திரை மாதம் நிகழவிருக்கும் திருமணத்திற்கு அதற்கு முந்திய பங்குனி மீ 15உ க்குள் விண்ணப்பம் நிறைவு செய்து கொடுக்கவேண்டும். அதுபோல் ஒவ்வொரு தமிழ்மாதமும் நடைபெறவிருக்கும் திருமணங்களுக்கு அதற்கு முந்திய மாதம்15உக்குள் விண்ணப்பங்களை நிறைவுசெய்து அனுப்ப வேண்டும்.

இதுதவிர ஆண்டு ஒன்றுக்கு அறப்பணிக்கழகம 6 திருமணங்களை (தை மாதம் மூன்று; வைகாசி மாதம் மூன்று) நடத்தி வைக்கத்திட்டமிட்டுள்ளது. முதல் 6 திருமணங்கள் நேமம் கோவிலில் நடைபெறும். இந்த வகைத் திருமணம் ஒன்றுக்கு ரூ. 30,000/- முதல் 40,000/-வரை செலவு ஏற்படும் எனக் கருதப்படுகிறது.

கல்வியைப் பொறுத்த அளவில் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒன்றரை இலட்சம் நன்கொடை வழங்கத் திட்டமிட்டுள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் கல்விக்கான விண்ணப்பப் படிவங்களை ஜூலை மாதம் பெற்று செப்-15க்குள் கொடுக்க வேண்டும்.

— இவ்வாறு அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவம் பெறுவதற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

திரு, பழ. மு. வெங்கடாசலம் செட்டியார்
பொருளாளர்
மூவார் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்
அறப்பணிக் கழகம்
15, மார்த்தாண்டபுரம் முதல் வீதி
புதுக்கோட்டை - 622 001

தொலைபேசி : 21918

இருமுடியின் இணையற்ற தத்துவம்

ஒரு முறை நான் சென்னை சென்ற பொழுது, ஐந்தாறு பொருள்களோடு சென்றேன். இரயிலை விட்டு இறங்கியதும் அந்தப் பொருள்களைத் தூக்கிக் கொண்டுவர போர்ட்டர்களை அழைத்தேன். வேகமாக என் அருகில் வந்த ஒரு போர்ட்டர், ''ஐயா ! நான் ஒருவனே எல்லாப் பொருள்களையும் தூக்கிக்கொண்டு வந்துவிடுகிறேன் இரண்டு பேருக்குக் கொடுக்கிற கூலியை எனக்குத்



தந்துவிடுங்கள்'' என்று கேட்டார். நானும் அதற்குச் சம்மதித்தேன். எல்லாப் பொருள்களையும் அவர் ஒருவரே தூக்கிக் கொண்டு வந்து இரயில் நிலையத்திற்கு வெளியில் நின்றுகொண்டிருந்த என் காரில் வைத்தார். இரண்டு பேருக்குக் கொடுக்கும் கூலியான பத்து ரூபாயை அவரிடம் கொடுத்தேன். திருப்தியோடு அவர் போய்விட்டார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தான் நான், முதன் முறையாக சபரிமலை யாத்திரையை மேற்கொண்டேன். அப்பொழுது இருமுடியைச் சுமந்து கொண்டு நடக்கத் தொடங்கியபோது தான், சுமையின் அருமை தெரிந்தது. அதோடு சில மைல்கள் சென்ற பிறகு, பாரம் அதிகம் அழுத்தத் தொடங்கியது. தொடர்ந்து நடக்க முடியாமல் நான் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு, சரணம் சொல்லி, பிறகு மீண்டும் நடக்கத் தொடங்கினேன். அப்பொழுது, எல்லாப் பொருள்களையும் தூக்கிக் கொண்டு வந்த போர்ட்டரின் நினைவு எனக்கு எழுந்தது.

துன்பம் ஒன்றை நாம் அனுபவிககும்போதுதான் பிறர் துன்பத்தை அறியும் சக்தி, நினைத்துப் பார்க்கும் வாய்ப்பு, அதற்காக அனுதாபப்படும் மனநிலை ஆகியன நமக்கு ஏற்படுகின்றன.

''எல்லாப் பொருள்களையும் நான் ஒருவனே தூக்கிக் கொண்டு வருகிறேன்'' என்று கூறிய பொழுது, 'பாரம் அதிகமாயிற்றே, பாவம் அவர் தலை வலிக்குமே;' என்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை. அப்படித் தோன்றி இருந்தால், இரண்டு போர்ட்டர்களைத் தூக்கி வருமாறு செய்து, இருவருக்கும் சற்று அதிகமான தொகையை கொடுத்திருப்பேனே !

இருமுடி என் தலையில் ஏறிய போதுதான், இன்னொரு ஏழை யின் தலையில் ஏறிய சுமைகளின் பளு என் நினைவில் எழுந்தது.

எவ்வளவு பெரும்செல்வராக இருந்தாலும், ஐயன் சந்நிதானத் திற்கு வரும்பொழுது தலையில் இருமுடியைச் சுமந்துகொண்டு தான் வரவேண்டும் என்னும் நியதி இருப்பது, மற்றவர் சிர மத்தை அவர்களும் உணர வேண்டும் என்னும் தத்துவத்தை உணர்த்துவதற்காகத்தான் இருக்க வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது, எவ ராக இருந்தாலும், எத்தனை கோடி செல்வத்திற்கு அதிபதி யாய் இருந்தாலும், இருமுடி யைச் சுமந்து பதினெட்டுப் படி களைக் கடந்துதான் ஐயன் சந்நதிக்கு வரவேண்டும். இதற்கு மாற்றுவழியே இல்லை. இதைப் பார்க்கின்றபொழுது, வேறு பாடற்ற - சமநிலையான - சமதர்ம சமுதாயத்தின் மாபெரும் காவ லராக - கண்கண்ட தெய்வமாக ஐயப்ப சுவாமிதான் 'விளங்கு கிறார் எனத் திடமாகச் சொல்ல லாம் (திரு. வி. என். சிடி. எழுதிய ''ஸ்ரீ ஐயப்பன் தத்துவங் கள்'' என்கிற நூலிலிருந்து)



ஒக்கூர் திரு. ஆத. கரு. வே. சிதம்பரம் செட்டியார் புதல்வன் சுப்பிரமணியனுக்கும் சிராவயல் திரு. வ. பழ. வ. பழ. வள்ளியப்ப செட்டியார் புதல்வி நாச்சயம்மைக்கும் 11-12-95 அன்று சிராவயல் மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மதுரை நகரத்தார் சங்கத்தில் பாராட்டு விழா

தொழிலதிபர்கள், முக்கிய பதவியில் உள்ள அறுவருக்கு மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக 24—12—95 அன்று மதுரை நகர விடுதியில் ஒரு பாராட்டு விழா நடைபெற்றது.

எவர்பிரைட் திரு. நாச்சியப்ப செட்டியார் இறை வணக்கம் பாட செயலாளர்களில் ஒருவரான திரு. ஆர். சொக்கலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

சிறப்பு விருந்தினர்களான திரு. எஸ். ஆர்எம். பிஎல். சுப்பிரமணியன் செட்டியார் (பள்ளத்தூர்), திரு. ஏஎல். வடிவேலு (தேவகோட்டை) திரு. சிவ. ராம. இராமநாதன் (பூலாங்குறிச்சி) கவிஞர் திரு. செல்ல கணபதி (கண்டனூர்), திரு. எஸ்பி. அழகப்பன் (கண்டவராயன்பட்டி), திருமதி மீனுள் பழநியப்பன் (விரையாச்சிலை) ஆகியோரை திரு. லெ. நா., முனைவர் திரு. தமிழண்ணல் இருவரும் பாராட்டிப் பேசினுர்கள்.

விழாவிற்கு சங்கத் தலைவர் டாக்டர் திரு. எஸ். சண்முகம் செட்டியார் தலைமை ஏற்று உரையாற்றினர்.

சங்கத்தின் சார்பாக சிறப்பு விருந்தினர்களுக்கு திரு. லெ. நா பொன்னுடை அணிவித்து நினைவுப்பரிசுகள் வழங்கினர்கள்.

முன்னதாக மதுரை நகர விடுதிக் கட்டிட நிதிக்குப் பெரும் நன்கொடை வழங்கியவரும் நகரத்தார் சங்கத்தின் கௌரவ ஆலோசகருமான பாகனேரி திரு. வெ. வெ. கரு. வே. மாணிக்கம் செட்டியாரின் மறைவு குறித்து இரங்கற் தீர்மானம் வாசிக்கப்பெற்று மௌன அஞ்சலி செலுத்தப் பெற்றது.

சிறப்பு விருந்தினர்களின் ஏற்புரைக்குப்பின் மற்றெரு செயலானர் திரு. லெ. மு. மு. முத்து மாணிக்கம் நன்றி தெரிவித்தார்.

விழாத் தொடக்கத்தில் அனைவருக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பெற்றது.


மணிவிழா

கடியாபட்டி விஸ்வநாதபுரம் திரு. வயி. சித. சிதம்பரம் செட்டியார் திருமதி மீனுட்சி ஆச்சியின் 60-ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா 10—11 95 அன்று கடியாபட்டியில் சிறப்பாக நடைபெற்றது.

உ
சிவமயம்

ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் : மறைவு :
14—5—1955 24—1—1989



டாக்டர் பழநி அண்ணாமலை

ஏழு பிறப்பெடுத்தாலும் எங்கள்
அண்ணன் போல் ஏற்றமிகு ஏந்தலை
காண்கிலோமில்லை ! — பழனி மலையில்
வேண்டுதலை நிறைவு செய்யச் சென்றவர்
மீண்டுவர வரம் பெற்றிலோமில்லை, பழனி
ஆண்டவர் தம் பணிசெய்ய பணித்தனரோ
அறியவில்லை ! ஆருத்துயரோடு இப்புவியில்
ஏழு வருடம் கழித்துவிட்டோம்
நூறு வருடம் கழிந்தாலும் கந்தன்
பேறு உள்ளவரை அண்ணன் பேர் இருக்கும் !

பழ. இராமநாதன் பழ. சுப்பிரமணியம்
(தம்பிகள்) பலவான்குடி



செய்திகள்

வாசிப்பவர் : எல். சுந்தரம்

ஃ மதுரை 'பழம் நீ' பாத யாத்திரைக் குழுவின் சார்பாக 5—1—96 மாலை பூஜையும் 6—1-96 மாலை கவியரங்கம் பட்டமளிப்பும் மதுரை நகரவிடுதியில் நடைபெற உள்ளன.

ஃ வயிரவன் கோவிலில் 27-11—95 அன்று (கார்த்திகை மீ° 11வ) சம்பா சஷ்டித் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

ஃ வயிரவன்கோவில் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் 12-1-96 (வெள்ளி) அன்று காலை நடைபெற உள்ளது.

ஃ இராயவரம் திரு. எஸ்பி. வயிரவன் செட்டியார் சென்னை காஸ்மாபாலிட்டன் கிளப் தலைவராக பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் தேர்வு செய்யப் பெற்றிருக்கிறார்.

ஃ பாகனேரி திரு. இராம. அண்ணமலை செட்டியார்-திருமதி அண. சரோஜாஆச்சியின் 59ஆம் ஆண்டு நிறைவுவிழா அவர்களின் நாகமலை புதுக்கோட்டை இல்லத்தில் 5—12—95 அன்று நடைபெற்றது.

ஃ திருப்பரங்குன்றம் நகரவிடுதியில் 29—1—96 (தைமீ° 16வ) திங்கட்கிழமையன்று மரகத விநாயகருக்கு அபிஷேகமும் தைக் கார்த்திகையை முன்னிட்டு அன்னதானமும் நடைபெறும் என அவ்விடுதியின் கௌரவச் செயலாளர் திரு. ஆர்எம். அண்ணமலை தெரிவித்திருக்கிறார்.

ஃ கலாமடம்-பாதரக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு. இரவீந்திர சுவாமிகளின் 41 ஆது ஜெயந்தி விழா பாதரக்குடியில் 10—1—96 புதன்கிழமை நடைபெற உள்ளது. அப்போது முறையூர் திரு. பழ ராம. இராமசாமிச் செட்டியாருக்கு 'அருட்பணி அண்ணல்' விருது வழங்கப்பெறவிருக்கிறது.

ஃ 15—1—96 திங்களன்று பொங்கல் திருநாளும் 16-1-96 மாட்டுப் பொங்கலும் நாடெங்கும் கொண்டாடப்பெறுகின்றன.

ஃ 23—1—96 செவ்வாய்க்கிழமையன்று நாட்டரசன் கோட்டை, பாகனேரி ஆகிய ஊர்களில் செவ்வாய்ப் பொங்கல் கொண்டாடப்பெறவிருக்கிறது.

ஃ தேவகோட்டை வன்றொண்டர் செட்டியார் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர். தேவகோட்டையில் சிவன் கோவில் கட்ட இடம்தந்து உதவியவர்.

ஃ உ. சிறுவயல் தேனாற்றங்கரை ஸ்ரீ ஆஞ்சநேயர் சுவாமியின் ஜெயந்தி விழா 22—12—95 அன்று சிறப்பாக நடைபெற்றது.

ஃ திருச்சி மேலப்புலிவார் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீசித்தி விநாயகர் ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயிலில் 21—12—95 அன்று ஆஞ்சநேயருக்கு 10,008/- வடைகள் கொண்ட வடைமாலை அணிவிக்கப் பெற்று 5 ஆவது ஆண்டு ஜெயந்தி விழாக் கொண்டாடப் பெற்றது.

ஃ கீழச்சிவல்பட்டியில் பாடுவார் முத்தப்பர் கோட்டம் பெரும் பொருட்செலவில் உருவாகி வருகிறது. அவினாசி ஸ்ரீ முத்துக்குமார் சிற்பக்கலைக் கூடத்தின் தலைமைச் சிற்பி திரு. சி. இராமசாமியும் அவர்களது புதல்வர்களும் வலிவோடும் பொலிவோடும் உருவாக்கி வருகிறார்கள்

அறங்காவலர்கள் நியமனம்

இலுப்பைக்குடிக் கோவில் நகரத்தார்களின் பொதுக்குழுக் கூட்டம் 17-12-95 அன்று நடைபெற்றது அப்போது தேவகோட்டை திரு. எல். பி. வீரப்ப செட்டியாரும் நடராஜபுரம் திரு. உல. சுப. உலகப்ப செட்டியாரும் அறங்காவலர்களாக நியமிக்கப் பெற்றனர்.

மதுரை நாகமலையில் குடநீராட்டு விழா

மதுரையை அடுத்து, நாகமலை என்.ஜி.ஓ. காலனியில் உள்ள திருமுருகன் கோவிலில் புதியதாக தீர்மாணிக்கப் பெற்ற அருள்மிகு ஐயப்பன் சன்னதியில் திருவுருவ பிரதிஷ்டையும் விமான குடநீராட்டும் 12-11-95 சிறப்பாகநடைபெற்றனவிழாஏற்பாடுகளை ஆலயக்குழுவின் செயலாளர் நாட்டரசன்கோட்டைதிரு எஸ். சோமசுந்தமும் பொருளாளர், நடராஜபுரம் திரு. எல். சுப்பிரமணியனும் சிறப்புறச்செய்திருந்தனர்.

செய்திகள்


ஃ நாட்டரசன்கோட்டை திரு சுப.ராம.லெ. இராமகிருஷ்ணன் செட்டியார் - திருமதி வள்ளியம்மை ஆச்சியின் சதாபிஷேகம் (முத்து விழா) 30-1-96 செவ்வாயன்று நாட்டரசன்கோட்டையில் நிகழவிருக்கிறது.

ஃ 'பதிப்புச் செம்மல்' முனைவர் திரு. ச. மெய்யப்பனும் "குமுதம்" "கல்கண்டு" இதழ்களின் துணை ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணனும் தென்னாப்பிரிக்கா முதலிய நான்கு நாடுகளுக்குப் பயணமாக 28-12-95 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள். இவர்கள் 14—1—96 மாலை சென்னை திரும்பவிருக்கிறார்கள்.

ஃ வேந்தன்பட்டி நகரச்சிவன் கோவிலின் (நெய் நந்தீஸ்வரர்) திருக்குட நன்னீராட்டு விழா 26—1—96 (தை மீ 12 உ) நடைபெற உள்ளது.

ஃ 4-2-96 தைப் பூசத்தன்று மதுரை மாரியம்மன் கோவிலில் தெப்பத் திருவிழா நடைபெறவிருக்கிறது.

ஃ பிரபல தொழிலதிபரும் வயிரவன் கோவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் தலைவருமான பள்ளத்தூர் திரு. சு. ராம. பழ. சுப்பிரமணியன் செட்டியார் - திருமதி வள்ளியம்மைஆச்சியின்71ஆவதுபிறந்த தினத்தை ஒட்டி 13-1-96 சனிக்கிழமை காலை7-45 மணி அளவில் வயிரவன் கோவிலில் வயிரவர் ஹோமம் நடைபெற உள்ளது.



பனையப்பட்டி திரு. சி. மு. மு ராம. முத்துக்கணேசன் செட்டியார் பேரனும் டாக்டர் GN. சுப்பையாவின் புதல்வனுமான முத்து கணேஷ் M.Sc.,க்கும் சொக்கலிங்கம் புதூர் திரு. அண. காசிவிஸ்வநாதன் செட்டியார் புதல்வி உண்ணாமலை B.A. க்கும் சொக்கலிங்கம் புதூரில் 5—11—95 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுடன் நமது இதழின் ஆசிரியர் திரு. வி.என். சிடி.

மதுரை நகரத்தார் சங்கம் அளித்த பாராட்டு விழாவில் கேட்டவை

நம் வீடுகளிலே வாதிடுபவர்கள் ஆச்சிமார்கள். அங்கு செட்டியார்கள் வென்றதாகச் சொல்ல முடியாது. ஆச்சிமார்களை வழக்கறிஞர்களாக மாற்றி விட்டால் நாம் வீடுகளில் நிம்மதியாக இருக்கலாம். நம்மை வழி நடத்துவதற்கு ஆச்சிமார்கள் வந்துவிட்டால் நம்மிடம் உள்ள சிற்சில குறைபாடுகள் நீங்க வாய்ப்புண்டு.

இரண்டாம் உலகப்போர் வராதிருந்தால் நகரத்தார்கள் இன்னும் கொடிகட்டிப் பறப்பார்கள்.

— முனைவர் தமிழண்ணல்

கால மாறுதல்களுக்கு ஏற்ப நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் முன்னேறலாம்.

நமது பலம், நமது பரம்பரை ஆகும். நாம் தொழில் செய்வதில் மட்டுமல்ல, விருந்து உபசரிப்பிலும் சிறந்தவர்கள். நம்மிடம் உள்ள நாணயம், நம்பிக்கை, தெய்வபக்தி, பணவசதி, கணக்குப் போடும் யுக்தி, நிர்வாகத் திறமை, குடும்ப ஒற்றுமை ஆகியவையும் நமது பலமாகும்.

நம்மிடம் உள்ள ஒரு சில குறைபாடுகளைத் தவிர்க்க நாம் முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய எண்ணம் பெரிதாக இருக்க வேண்டும். பொருமை உணர்ச்சியை ஒழிக்க வேண்டும்.

தனித்துவம் இருந்தால் முன்னேற வாய்ப்புண்டு. நமக்காக நாம் வாழ வேண்டுமே தவிர பிறருக்காக வாழக் கூடாது. பிறருடைய ஐந்தொகைக் கணக்கைப்பார்க்க ஆசைப்படக் கூடாது. பெண்கள். நிறைய முன்னேற்றம் காண வேண்டும். நாம் சிபாரிசுக்கு அதிகமாகப் போகாமல் தகுதி அடிப்படையில் எதையும் பெறத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

— ஏஎல். வடிவேலு

(தலைவர் தென்னிந்திய வணிகக் கழகம், சென்னை)

திரைப்படத்துறை ஆபத்தான துறை. அத்துறை, ஆண்டு ஒன்றுக்கு 600 கோடி ரூபாய் நட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது நம்மவர்கள் திரைப்படத்துறைக்கு வரவேண்டாம். அத்துறைக்கு தயாரிப்பு தவிர-தொழில் நுட்ப ரீதியாக வரலாம்.

— எஸ்வி. ஆர்எம். இராமநாதன்

(துணைத்தலைவர், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை, சென்னை)

நம் நாட்டில் குழந்தைகளுக்காக எழுதுபவர்கள் குறைவு எனவே குழந்தை இலக்கியத்திற்கு முக்கியததுவம் கொடுத்து எழுதி வருகிறேன். ஒருவரின் சிறப்பை அவருடைய நண்பர்களைப் பார்த்துக் கண்டு கொள்ளலாம்.

கம்ப்யூட்டரைவிட விரைவாகக் கணக்கிடக் கூடியவர்கள் நகரத்தார்கள். நகரத்தாரின் பெருமை அளவிடற்கரியது.

— கவிஞர் செல்லகணபதி

நகரத்தாரின் வேலை வாய்ப்பு, கல்வி ஆகியவற்றிற்காக மாநாடு நடத்தி அவற்றில் வெற்றி பெற நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட போராட்டத்தில் கலந்துகொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்.

— எஸ்பி. அழகப்பன்

(துணைத்தலைவர், தமிழ்நாடு சேம்பர் ஆப் காமர்ஸ், மதுரை.)

நம்மினத்தில் 75 சதவிகிதம் பேர் நடுத்தரவர்க்கத்தினர். நம்மினத்தில் பெண்களை அதிகம் படிக்க வைக்கத் தயங்குகிறார்கள். அதிகம் படிக்க வைத்து விட்டால் அதற்கு ஏற்றார்ப்போல் மாப்பிள்ளை தேட வேண்டும்; அதிகஅளவு வரதட்சணை கொடுக்க வேண்டுமென்று நினைத்து ஓரளவே படிக்க வைக்கிறார்கள்.

நாம் முன்னேறிய இனத்தவராக இருப்பதால் கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் எல்லாத் தரப்பாரோடும் போட்டியிட வேண்டியதிருக்கிறது. கல்வித் தேர்வில் வெற்றி பெற Extra Brain தேவையாக இருக்கிறது.

நம் வாழ்க்கையில், திருமணங்களில் பலவித மாற்றங்கள் அவசியம் தேவைப்படுகின்றன. அவற்றைச் சிந்தித்துச் செயலாற்ற பெரிய மனம் தேவைப்படுகிறது.


— மீனாள் பழநியப்பன்

(நடுவர், இரண்டாவது உரிமையியல் நீதிமன்றம், கோவை)

(மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக 24—12—95 அன்று மதுரை நகர விடுதியில் நடைபெற்ற பாராட்டு விழாவில்)

திருமணம்

கண்டவராயன் பட்டி திரு. பழ. கரு. வி. பெரி. வி. இராமநாதனின் மகன் செந்திலுக்கும் வேந்தன்பட்டி திரு. எஸ். நாகப்பச் செட்டியாரின் மகள் உமாவிற்கும் 10—12—95 அன்று வேந்தன் பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அப்போது கண்டவராயன்பட்டி காங்கிரஸ் தியாகிகள் சங்கச் செயலாளர் திரு. அ. வல்லநாட்டான்பதிப்பித்ததிருமணவாழ்த்துமலர்வெளியிடப்பெற்றது



கொப்பனுபட்டி திரு. பழ. லெ. சொக்கலிங்கம் செட்டியார் பேரனும் திரு. லெட்சுமணன் செட்டியார் புதல்வனுமான சொக்க லிங்கம், B.Com , P.G D.M.P.க்கும் இராங்கியம் திரு. நா. வ. லெட்சுமணன் செட்டியார் பேத்தியும் திரு. சிதம்பரம் செட்டியார் புதல்வியுமான கண்ணம்மைக்கும் 26—10—95 அன்று இராங்கியத் தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



மேற்படி திருமண விழாவில் மாப்பிள்ளை சொக்கலிங்கத்திற்கு 'மீனாட்சி திருமைந்தன்' திரு. வி. என். சிடி. பரிசு வழங்கும் காட்சி அருகே திரு. பழ. லெ. சொ. அவர்களும் திரு. பழ. லெ. சொ. லெ. அவர்களும் உள்ளனர்.

வயிரவன் கோவில் நகரத்தார் பெருமக்களுக்கு அன்பான வேண்டுகோள்!

யுவ ஆண்டு தை மாதம் 26-ஆம் நாள் (9—2—1996) வெள்ளிக்கிழமை காலை 9-15 மணி அளவில் நடைபெறவிருக்கும் திருக்குட நன்னீராட்டுக்கு அனைவரும் மனமுவந்து நன்கொடை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகிறார்கள்.

இத்திருக்குட நன்னீராட்டு விழாவுக்கு புள்ளி ஒன்றுக்கு ரூ.101-00 வீதம் புள்ளிவரியை தங்கள் வயிரவன் கோவில் பிரதிநிதியிடம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

திருக்குட நன்னீராட்டுச் சிறப்பு மலருக்கு தொழிலதிபர்கள் வணிகப்பெருமக்களிடம் விளம்பரங்களைப்பெற்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விளம்பரக் கட்டணம்

முழுப் பக்கம் (ஆர்ட் பேப்பர்)	ரூ. 3000/-
முழுப் பக்கம் (சாதா)	ரூ. 1500/-
அரைப் பக்கம்	ரூ. 750/-
மலர் பிரதி ஒன்றின் விலை	ரூ. 50/-

முன் பணம் செலுத்தி பதிவு செய்து கொள்பவர்களுக்கு மட்டும் வழங்கப்பெறும்.

யாகசாலை செப்புக்குடம் 1க்கு	ரூ. 1,001/-
மண்டலாபிஷேக உபயம் நாள் 1க்கு	ரூ. 501/-

நன்கொடை மலர் தேவைக்குபணம் அனுப்ப வேண்டிய முகவரி

வயிரவன்கோவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்

நகரவயிரவன்பட்டி, சிறுகூடல்பட்டி 630 215.

பாகனேரி
வே. மாணிக்கம் செட்டியார்
இயற்கை எய்தினுர்

மதுரை நகர விடுதிக் கட்டிட நிதிக்கு ரூ. 1,11,111/- நன் கொடை வழங்கி புதிய கட்டிடம் உருவாகக் காரணகர்த்தாவாக விளங்கிய பாகனேரி திரு. வெ. வெ. கரு. வே. மாணிக்கம் செட்டியார் அவர்கள் தமது 82 ஆவது வயதில் 15—12-95 அன்று மதுரையில் இயற்கை எய்தினுர்கள்.



தமது சதாபிஷேகத்தை (முத்து விழா) 18—12—95 அன்று மதுரையில் சிறப்பாகக் கொண்டாட எல்லா ஏற்பாடு களேயும் செய்து வந்த வேளேயில் அவர்கள் இறைவனடி சேர்ந்தது மிகவும் வேதனேக்குரியதாகும்.


பல நற்குணங்களுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்த திரு. வே. மாணிக்கம் செட்டியார் அவர்கள் மதுரை நகரவிடுதிக் கட்டிட நிதிக்கு மட்டுமல்லாமல் பல நல்ல காரியங்களுக்கும் மன முவந்து நன்கொடை வழங்கி யிருக்கிருர்கள்.

திரு. மாணிக்கம் செட்டியார் அவர்கள் பிள்ளையார்பட்டிக் கோவிலேச் சேர்ந்தவர்கள். தெற்கு வட்டகையில் முதன் முதலில் (1936-ல்) B.A பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்கள். இரங்கூனில் பலகாலம் இருந்த வர்கள். கொச்சி சௌத்இந்தியா கார்ப்பரேஷனில் பல ஆண்டுகள் பணியாற்றியவர்கள். 1955-56ல் தம் சொந்த ஊரான பாக னேரியில் ஊராட்சியின் தலேவ ராகச் சேவை செய்தவர்கள்.

மாணிக்கம் செட்டியார் அவர்கள் அன்புக்கும் அடக்கத் திற்கும் எளிமைக்கும் உதாரண மாகத் திகழ்ந்தவர்கள். யார் எதைச் சொன்னாலும் அதை நம்பிவிடும் குழந்தை மனம் படைத்தவர்கள். இன உணர்வு மிக்க அவர்கள் நகரத்தார்களின் முன்னேற்றத்தில் பெரிதும் அக் கறைகாட்டி தேவையான உதவி களேச் செய்து வந்தார்கள். இவர் களது இழப்பு பேரிழப்பாகும்.

திரு. மாணிக்கம் செட்டி யாருக்கு திருமதி உண்ணுமலே ஆச்சி என்கிற மனேவியும் திரு. மா. கணேசன் என்கிற சுவீகாரப் புதல்வரும் பேரன் பேத்தியும் உள்ளனர். திரு. கணேசன் ஆடிட்டராவார்.

எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்

21-8-1932 :

மறைவு :

25-12-1987

S. செந்தில்நாதன் செட்டியார்

சித. சா. இல்லம், தேவகோட்டை

நிதிப் பள்ளியில் நிலையான ஆங்கில
வரலாற்று ஆசானாய்த் திகழ்ந்தீர்
மாணவ மாணவியர் மனம் மகிழ
ஆங்கிலத்தை எளிய நடையில் கற்பித்தீர்
வரலாற்றை குறிப்பின்றிக் கற்பித்தீர்
நகைச்சுவை கலந்த நடையுடையீர்
மூச்சு நிற்கும் வரை உழைத்தீர்
நிறைகுடம் நீர் ! வரலாற்றுப் புத்தகம் நீர் !
வானம் சென்றாலும் நும் புகழ் ஓங்குக !

மனைவி : **S. இந்திராள்**

மகன் : **S. விஸ்வநாதன்** மருமகன் : **S. மணிகண்டன்**

மருமகள் : **V. விஜயா** மகள் : **M. விசாலாட்சி**

ஐஸ்வரியா, செந்தில்நாதன்

வயிரவர் தீர்த்தம்

வயிரவன் கோவிலில், கோவிலுக்குத் தெற்குப்புறம் உள்ள வயிரவர் தீர்த்தம் நீண்ட காலமாக கவனிக்கப்படாமல் மண் மேவி இருந்தது குட நீராட்டை ஒட்டி இப்போதுள்ள நிர்வாகத்தினர் அதனைத் தூர் எடுத்து புதுப்பித்துச்சுற்றிலும் சுவர்எழுப்பி அழுகுபடுத்தியுள்ளனர்.

இந்த வயிரவர் தீர்த்தத்தில் சித்திரை மாதம் பௌர்ணமியன்று நீராடினுல் ஆண் மகவு உருவாகு மென்றும் ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்கன்று நீராடினுல் பெயரும் புகழும் கிடைக்குமென்றும் மார்கழி மாதம் திருவாதிரை நாளன்று நீராடினுல் நோய்கள் நீங்குமென்றும் தைமாதம் தைப்பூசநாளில் நீராடினுல் செல்வம் பெருகு மென்றும் வயிரவன் கோவில் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. (இந்தப் புராணத்தை தர்மபுர ஆதீனவித்வான் சேந்தன்குடி வி. நடராஜக் கவிராயர் எழுதியுள்ளார்.)

வயிரவன் கோவில் தோரண வாயில் திறப்பு விழா

திருப்பத்தூர் — குன்றக்குடி சாலையில் வயிரவன் கோவிலுக்குச் செல்லும் முகப்பில் தோரண வாயில் ஒன்று அழகிய முறையில் உருவாக்கப் பெற்றுள்ளது. அது போல் கோவிலுக்கும் தெப்பக் குளத்திற்கும் மத்தியில் முன்மண்டபம் ஒன்றும் உருவாக்கப்பெற்றுள்ளது. இவ்விரண்டின் திறப்பு விழாக்கள் 4—2—96 ஞாயிறு காலையில் நிகழுமென்றும் அன்று மாலை 4-00 மணிக்கு 'காசி ஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் வயிரவர் புராணம்பற்றி சொற்பெருக்காற்றவிருக்கிருர் என்றும் வயிரவன் கோவில் சங்கத்தின் செயலாளர் திரு. ஆர்எம். சுப்பிரமணியன் தெரிவித்திருக்கிருர்.

வயிரவன் கோவிலில் புதிதாக 6 தங்கும் விடுதிகள் (cottage) கட்டப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நூலகப் புரவலர் நியமனம்

கண்டவராயன்பட்டியிலுள்ள மாவட்டக் கிளை நூலகத்திற்கு கண்டவராயன்பட்டி அழ. அ. குடும்பத்தைச்சேர்ந்த திரு. அழ. சுப. அழகப்பன் 12—12—95 அன்று ரூ. 1000/-ஐ புரவலர் நிதியாக வழங்கியுள்ளார் இதனை ஒட்டி நூலகப்புரவலராக அவரை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது



தோற்றம் :
2—7—1914

மறைவு :
15—12—95

திருப்பணிச் செம்மல்

பாகனேரி

வெ. வெ. கரு. வே மாணிக்கம் செட்டியார் B.A.

முன்னாள் மேலாளர் : பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், ரெங்கோன்

முன்னுள் தலைவர் : பாகனேரி பஞ்சாயத்து போர்டு

முன்னாள் உதவி மேலாளர் : சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிட் கொச்சின்

புரவலர் : நகரத்தார்சங்கம், மதுரை

அவர்களது மறைவிற்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தும்...

மா. உண்ணுமலை ஆச்சி — மனைவி
மா. கணேசன் — மகன்
க. சகுந்தலா — மருமகள்
க. வித்யா — பேத்தி
க. விஷ்னு மாணிக்கம் — பேரன்

வே.மாணிக்கம் செட்டியாருக்குப் புகழஞ்சலி

மதுரை நகர விடுதிக் கட்டிட நிதிக்கு பெரும் நன்கொடை அளித்தவரும் 15-12-95 அன்று இறைவனடி சேர்ந்தவருமான பாகனேரி திரு வெ. வெ. கரு. வே மாணிக்கம் செட்டியாருக்கு மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் சார்பில் 20—12—95 அன்று மதுரை நகர விடுதியில் நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு இளைஞர் சங்கத் தலைவர் திரு இரா. சொக்கலிங்கம் தலைமையேற்றுப் புகழஞ்சலி செலுத்தினர். அவரைத் தொடர்ந்து மதுரை நகரத்தார் சங்கத்தலைவர் டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார், மதுரை வடக்கு நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. நடராஜ் அண்ணாமலை, முனைவர் திரு. தமிழண்ணல் திரு. எம். சிஎன். மாணிக்கம், அறங்காவலர் திரு எம். கண்ணப்பன், திரு. இரயில் பழநியப்பன், திரு. அழ. சோமசுந்தரம் திரு. நா. இளங்கோவன், திரு. இராம. அண்ணாமலை ஆகியோர் புகழஞ்சலி செலுத்தினர்.

முன்னதாக மூன்று நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்பெற்றது.

கூட்டத்தில் பேசிய அனைவருமே திரு. மாணிக்கம் செட்டியாரின் அன்பை, பண்பை, எளிமையை, இனஉணர்வை, சுறுசுறுப்பைப் பாராட்டிப் பேசினர்.

மதுரை நகர விடுதி புதிதாகக் கட்டப்பெற காரணகர்த்தாவாக விளங்கிய அவரின் நினைவாக மதுரை நகரவிடுதியில்அன்னாரது ஒளிப்படத்தை வைக்கவேண்டுமென்று அனைவரும் வலியுறுத்தினர்.

சிந்தனைப் பூங்கா

கோவிலூர் ஆதீனத்தில் சிந்தனைப்பூங்காவின் 52ஆம் நிகழ்ச்சி 10-12-95 காலை சிறப்பாக நிகழ்ந்தது. கோவிலூர் ஆண்டவர் நாதசுரக்கல்லூரி மாணவர்கள் மங்கள இசை வாசித்தனர். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். திரு. சேதுராமன் 'ஆழ்நிலை தியானம்' பற்றிச் சிந்தனை உரை ஆற்றினார்.

கைலாச விநாயகர் கோவில் குட நீராட்டு விழா

புதுவயல் ஸ்ரீகைலாசவிநாயகர் கோவில் குடநீராட்டு விழா 31-8-95 காலை சிறப்பாக நடைபெற்றது. 29-8-95 இரவு விநாயகர் பற்றி கவியரங்கம் நடைபெற்றது. காசி ஸ்ரீ திரு, அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கினார். புலவர் திரு. இராம. வீரப்பன் வரவேற்றார்.

வே.மாணிக்கம் செட்டியாருக்குப் புகழஞ்சலி

மதுரை நகர விடுதிக் கட்டிட நிதிக்கு பெரும் நன்கொடை அளித்தவரும் 15-12-95 அன்று இறைவனடி சேர்ந்தவருமான பாகனேரி திரு வெ. வெ. கரு. வே மாணிக்கம் செட்டியாருக்கு மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் சார்பில் 20—12—95 அன்று மதுரை நகர விடுதியில் நினைவு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு இளைஞர் சங்கத் தலைவர் திரு இரா. சொக்கலிங்கம் தலைமையேற்றுப் புகழஞ்சலி செலுத்தினர். அவரைத் தொடர்ந்து மதுரை நகரத்தார் சங்கத்தலைவர் டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார், மதுரை வடக்கு நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. நடராஜ் அண்ணாமலை, முனைவர் திரு. தமிழண்ணல் திரு. எம். சின்ன. மாணிக்கம், அறங்காவலர் திரு எம். கண்ணப்பன், திரு. இரயில் பழநியப்பன், திரு. அழ. சோமசுந்தரம் திரு. நா. இளங்கோவன், திரு. இராம. அண்ணாமலை ஆகியோர் புகழஞ்சலி செலுத்தினர்.

முன்னதாக மூன்று நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்பெற்றது.

கூட்டத்தில் பேசிய அனைவருமே திரு. மாணிக்கம் செட்டியாரின் அன்பை, பண்பை, எளிமையை, இனஉணர்வை, சுறுசுறுப்பைப் பாராட்டிப் பேசினர்.

மதுரை நகர விடுதி புதிதாகக் கட்டப்பெற காரணகர்த்தாவாக விளங்கிய அவரின் நினைவாக மதுரை நகரவிடுதியில் அன்னாரது ஒளிப்படத்தை வைக்கவேண்டுமென்று அனைவரும் வலியுறுத்தினர்.

சிந்தனைப் பூங்கா

கோவிலூர் ஆதீனத்தில் சிந்தனைப்பூங்காவின் 52ஆம் நிகழ்ச்சி 10-12-95 காலை சிறப்பாக நிகழ்ந்தது. கோவிலூர் ஆண்டவர் நாதசுரக்கல்லூரி மாணவர்கள் மங்கள இசை வாசித்தனர். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். திரு. சேதுராமன் 'ஆழ்நிலை தியானம்' பற்றிச் சிந்தனை உரை ஆற்றினர்.

கைலாச விநாயகர் கோவில் குட நீராட்டு விழா

புதுவயல் ஸ்ரீகைலாசவிநாயகர் கோவில் குட நீராட்டு விழா 31-8-95 காலை சிறப்பாக நடைபெற்றது. 29-8-95 இரவு விநாயகர் பற்றி கவியரங்கம் நடைபெற்றது. காசி ஸ்ரீ திரு, அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கினர். புலவர் திரு. இராம. வீரப்பன் வரவேற்றார்.

இயற்கை எய்தினுர்

காரைடுகாத்தாரனச் சேர்ந்த வரும் நாடாளுமன்றத்தின் முன்னுள் உறுப்பினரும் சென்னை நகரத்தின் முன்னுள் ஷெரீப்பும் சென்னை நகரத்தின் முன்னுள் மேயரும் ரிசர்வ் வங்கியின் முன்னுள் இயக்குநருமான திரு.ஆர். இராமநாதன் செட்டியார் அவர்கள் தமது 83 ஆவது வயதில் 12—12-95 அன்று சென்னையில் இயற்கை எய்தினர்கள்.



திரு. ஆர். இராமநாதன் செட்டியார் அவர்கள் கரூர் தொகுதியிலிருந்து மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப் பெற்றவர்கள், அவர்களது மறைவு நாட்டிற்குப் பேரிழப்பாகும்.

சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் அறப்பணிக்கழகத்தின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவரான சோழபுரம் திரு.சுப.கண.அண்ணுமலை செட்டியாரின் துணைவியார் திருமதி கல்யாண ஆச்சி தமது 80 ஆவது வயதில் 26—10—95 அன்றுசிவ கங்கையில் இயற்கை எய்தினுர்.

தேவகோட்டை முத்துவீரப்ப செட்டியார் இயற்கை எய்தினுர்

தேவகோட்டை அ. லெ. அ. மு. வீ. முத்து வீரப்ப செட்டியார் அவர்கள் தமது77ஆவது வயதில் 3—12—95 அன்று சிவபதவி அடைந்தார்கள்.

கோவிலூர் மடத்தின் ஆண்டவர்மன்ற பொறுப்பாளராகவும் இராமேஸ்வரம் சங்கரமடம் நகரத்தார் பூஜாடிரஸ்ட் பொறுப்பாளராகவும் காசிநகரச் சத்திரத்தின் தலைவராகவும் மற்றும் பல்வேறு பொதுப் பணிகளில் அவர்கள் பங்கேற்றுச் செய்த பணிகள் கணக்கில் அடங்காது.

காஞ்சிபுரம்ஏகாம்பரேசுவரர் கோவில், வயிரவன் கோவில், இரணிக்கோவில் போன்ற கோவில்களின் குடநீராட்டு விழாக்களில் யாகசாலைப் பொறுப்புக்களை ஏற்றுச்சிறப்பாக நடத்திய செம்மல் இவர்கள்.

கோவிலூர் ஆதீனத்தில் 'தர்மப் பிரகாசம்' என்கிற பட்டமும் கேடயமும் பெற்றபெருமைக் குரியவர்கள்.

இவர்களுக்குதிரு செம்பொன் திரு.பெத்த பெருமாள் என இரு புதல்வர்களும் மூன்று புதல்விகளும் உள்ளனர். இவர்களது தம்பி புதல்வர்தான் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. அரு. லெட்சுமணன்.

முத்து வீரப்ப செட்டியார் அவர்களது இழப்பு நகரத்தார் சமூகத்திற்குப் பேரிழப்பாகும்.

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009-ல் அச்சிட்டு நடராஜ் அண்ணுமலை அவர்களால் 108-109, நேதாஜி ரோடு, மதுரை-625 001-லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி.என்.சிதம்பரம்.